1995 ஏப்ரல் 4]

பிறகு 18½ சதவீதம் கிடைக்கிற சூழ்நிலை கூட இருக்கிறது. 5½ ஆண்டுகள் போட்டால் 20 சதவீதம் கூட கிடைக்கிற சூழ்நிலை இருக்கிறது. மற்றைய நிதி நிறுவனங்கள் வங்கிகள் ஆகியவற்றில் கிடைக்கிற தொகையை விட அதிகமாகக் கிடைக்கிற வாய்ப்பு தான் சிறுசேமிப்புத் துறையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 202, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. டி. வேலையா கேட்கிறார். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

202—

திருநெல்வேலி மத்திய சிறைச்சாலையில் மகளிர் சிறைவசதி

*25248—*திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட மத்திய சிறைச்சாலையில் மகளிர் சிறை வசதி செய்துத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள கொக்கிரக் குளத்தில் உள்ள தனிக் கிளைச் சிறையில் பெண் சிறைக்கைதிகளுக்கு தேவையான வசதிகளும் இடஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. எனவே பாளையங்கோட்டையில் உள்ள மத்திய சிறையில் பெண் சிறைக் கைதிகளுக்கான ஒதுக்கீடு செய்யத் தேவையில்லை.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொக்கிரகுளத்தில் முன்பு 12 நீதிமன்றங்கள் இருந்தன. இப்போது 10 நீதிமன்றங்கள் பாளையங்கோட்டையில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இரண்டு நீதிமன்றங்கள் மட்டுமே தற்காலிகமாக அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கைதிகளை எல்லாம் இப்போது மத்திய சிறையில் இருந்து அந்த கோர்ட் வளாகத்திற்குக் கொண்டு செல்வதில் சிரமம் இல்லை. ஆனால் கொக்கிரகுளத்தில் இந்தச் சிறை மட்டும் தனியாக இருப்பதால் பெண் கைதிகளை எல்லாம் அங்கே வைத்திருப்பதும், கோர்ட்டுக்குக் கொண்டு செல்வதும் கொஞ்சம் சிரமமான காரியமாக இருக்கிறது என்று அங்கே பணிபுரியும் அலுவலர்கள் மூலமாகவும் எங்களுடைய தனி அனுபவத்தின் மூலமாகவும்

கண்டறிந்தோம். ஆகவே ஒட்டுமொத்தமாகவே அந்த சிறைச்சாலையிலே பெண்களுக்கும் தனியாக வசதி செய்து அங்கே அவர்களை வைக்க ஏற்பாடு செய்தால் சிரமம் குறைய வாய்ப்பு உண்டு. அதனை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை தங்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கொக்கிரகுளத்தில் இருக்கிற அந்த சிறைச்சாலையில் போதுமான அளவுக்கு வசதியும் வாய்ப்பும் இருக்கிற காரணத்தால் பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்காக புதிதாக இடத்தை உருவாக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரே இடத்திலே பெண்களுக்கு என்று தனிச் சிறைச்சாலை இருக்கிறது. குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற பெண் கைதிகளை வேலூருக்குக் கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஆங்காங்கே உள்ள கிளைச் சிறைச் சாலைகளிலேயே தனியாக பெண்களுக்கு என்று சிறைச்சாலை அமைக்க இந்த நிதியாண்டில் திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எந்தக் கருத்துருவும் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக முன்பெல்லாம் மத்திய சிறைச்சாலைக்கு செல்வது என்றால் ரோசப்படுவார்கள். ஆனால் இப்போது நாட்டிலே ஜெயிலுக்குப் போவதை பெருமையாக, கௌரவமாக நினைக்கிறார்கள். ஆகவே சிறைச்சாலை கைதிகளினுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. மத்திய சிறைச்சாலை என்று இருக்கின்ற அமைப்புதான் பல இடங்களில் தமிழ்நாடு மட்டத்தில் இருக்கிறது. கைதிகள் அதிகமாகி வருவதை முன்னிட்டு மத்திய சிறைச்சாலை எங்கெங்கே இல்லாமல் இருக்கிறதோ அந்த மாவட்டப் பகுதிக்கு மத்திய

TRUTH ALONE TRIUMPHS

சிறைச்சாலையின் கிளைப் பிரிவு—எப்படி உயர்நீதிமன்றத்தின் கிளைப் பிரிவை மதுரையில் அமைக்கப் போகிறோமோ அதுமாதிரி கிளைப் பிரிவை — அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சி காலத்தில்தான் நீதிமன்றங்களை எல்லாம் மாவட்டந்தோறும் பிரித்து வருகிறார்கள். அதுபோன்று புதிதாக ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு மத்திய சிறைச்சாலைகளை மாவட்டந்தோறும் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துரு ஏதும் அரசிடத்திலே தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 203, திரு. வி. கே. லட்சுமணன். இருக்கையில் இல்லை. திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

203—

புலியகுளத்தில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*23402—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புலியகுளம் போலீஸ் பாய்ஸ் கிளப்பிற்கு அருகில் உள்ள காலி நிலத்தை கல்யாண மண்டபம் கட்டுவதற்காக வருவாய்த்துறை கோவை மாநகராட்சியிடம் எப்பொழுது ஒப்படைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினா அனுமதிக்கப்பட்ட நாள் 24-12-1993. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்றபோது 20-3-1995-ல் இந்த கேள்விக்கு தேவையான பதிலை அறிவித்திருக்கிறார்கள்.